# பொருளாதாரத் தொகைமதிப்பு 2013/14

## (விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள்)

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

# தொலைநோக்கு

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை எய்தும் பொருட்டு, புள்ளிவிபரத் தரவுகளை துரிதமாக வழங்குவதில் பிராந்தியத்தின் முன்னோடியாகத் திகழ்தல்

# செயல்நோக்கு

உலகச் சூழலில் வளமிக்க நாடொன்றை உருவாக்கும் பொருட்டு, தந்திரோபாய தலைமையின் கீழ் அர்ப்பணம் மிகு அலுவலர்களின் சேவைப் பயன்பாடு, மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பவற்றின் மூலம் வினைத்திறன் மிக்க முறையில் புள்ளிவிபரங்களை சரியாகவும், துரிதமாகவும் வழங்கி, நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்குதலே இதன் செயல் நோக்கமாகும்

# சட்டப் பின்னணி

- தொகைமதிப்பு மற்றும் அளவீடுகளினூடாக தரவு சேகரிப்பதற்கான சட்ட ரீதியான அதிகாரம் தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் புள்ளிவிபரக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் மூலம் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- இக்கடளைச் சட்டங்களின் பிரகாரம், கொள்கை வகுத்தல் மற்றும் தீர்மானமெடுத்தலுக்குத் தேவையான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தரவுகளை வழங்குவதற்கு பதிலிறுப்போர் கட்ப்பட்டுள்ளனர்.

- புதிலளிப்போரின் தனித்தன்மையைப் பேணி நம்பிக்கையுடன் தரவு சேகரித்தல், திணைக்களத்தால் நிகழ வேண்டுமென கட்டளைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது தொகைமதிப்புகள், அளவீடுகள் தரவு சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிர்வாக அறிக்கையினூடாக தேவையான தரவுகளை சேகரிக்கின்றது.

## திணைக்களத்தால் வெளியிடப்படும் சில புள்ளிவிபரங்கள்...

- குடிசன வீட்டுவசதி சம்பந்தமான தகவல்கள்
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி
- கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
- எழுத்தறிவு வீதம்
- வறுமைக் கோட்டினை நிர்ணயித்தல்
- வேலையற்றோர் சதவீதம்
- நெல் மற்றும் ஏனைய விவசாயப் பயிர்கள், கால்நடை புள்ளிவிபரங்கள் போன்றன

# திணைக்களத்தினால் நடாத்தப்படும் பிரதான தொகைமதிப்புகள்

குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு (முதலாவதாக முடிவடையும் வருடங்களில்)

விவசாயத் தொகைமதிப்பு (2வதாக முடிவடையும் வருடங்களில்)

கைத்தொழில் தொகைமதிப்பு (3வதாக முடிவடையும் வருடங்களில்)

14 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு நடாத்தப்பட்டன

9 விவசாயத் தெகைமதிப்பு நடாத்தப்பட்டன

6 கைத்தொழில் தெகைமதிப்பு நடாத்தப்பட்டன

## இம்முறை விவசாய, கைத்தொழிற் சுற்றுகளில் உள்ள வேறுபாடு ....

நாட்டின் அபிவிருத்தி நடைமுறையைக் கருத்திற் கொண்டு விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தொகைமதிப்புகளை தனித்தனியாக நடத்தாது, இம்முறை சகல பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு பொருளாதாரத் தொகைமதிப்பு நடாத்தப்படுகிறது.



# பொருளாதாரத் தொகைமதிப்பின் நோக்கங்கள்

- நாட்டின் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகட் களநிலை சம்பந்தமான தகவல்கள் சேகரித்தல்
- மேற்படி களங்களின் அமைப்பு மாற்றங்கள் பொருட்டான கள அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தமைத்தலுக்கு அவசியமான தரவுகளை வழங்குதல்
- நாட்டின் பொருளாதார நிலையியற் தன்மைக்கு முக்கிய களங்களாக இனங்காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் முயற்சிகள் (SMEs) சம்பந்தமான தகவல்கள் சேகரித்தல்
- பொருளாதாரத்தில் முக்கியமான மற்றுமொரு பிரிவான முறைசாராப் பிரிவு (Informal Sector) அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்தல்
- அரசாங்க அனுசரணையுடன் பொதுசன வாழ்க்கை எழுச்சி தரமுயர்த்தலை மேற்கொள்ளும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்
- தேசிய கணக்குகள் தயாரிப்பதற்கான தகவல்களை வழங்குதல்
- ஏதிர்வரும் 10 வருடங்களில் அளவீடுகளை நடாத்த அவசியமான நிறுவனங்களின் பட்டியல் (மாதிரிச் சட்டம்) தயாரித்தல்

# மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பிரிவு ரீதியான பங்களிப்பு




**1950 வருடம்**




**1980 வருடம்**

**விவசாயத் துறையால் கூடிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.**

**கைத்தொழில், சேவைகட் பிரிவின் வளர்ச்சியால் விவசாயப் பிரிவின் பங்களிப்பு குறைவடைந்துள்ளது.**




**2012 வருடம்**

**தொகைமதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையிலும் விவசாயம் மற்றும் கைத்தொழில் பிரிவுகளில் வர்த்கம் மற்றும் சேவைப் பிரிவுகளின் பங்களிப்பு முன்னோக்கப்படட்டுள்ளது.**

## பொருளாதாரத் தொகைமதிப்பு என்பது,

ஏதேனும் நாடு ஒன்றினுள் செயற்பாட்டிலுள்ள சகல பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் கூறுகளையும் உள்ளடக்கியவாறு குறிப்பிட்ட காலப்பகுதியில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளில் ஈடுபடும் கூறுகளின் தகவல்களை சேகரித்தல், கோவைப்படுத்தல், மதிப்பிடுதல், ஆராய்தல் மற்றும் வெளியிடுதல் அல்லது வினியோகித்தலின் பூரண செயன்முறையாகும்.

**பொருளாதார முயற்சிகளில் ஈடுபடும் கூறுகள் ..**

➢ **விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் கூறு என்பது** : விற்பனை மற்றும் நுகர்வுக்காக மரக்கறி பயிரிடுதல், விற்பனைக்காக மிருகங்கள் வளர்த்தல் போன்றன ...

➢ **கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கூறு என்பது** : ஆடைக்கைத்தொழில், இரத்தினக்கல் அகழுதல், பேக்கரி போனறன ...

➢ **வர்த்தகம் மற்றும் சேவை நடவடிக்கையில் ஈடுபடும் கூறு என்பது** : கடை, கல்வி நிறுவனம் போன்றன ...

# பொருளாதாரத் தொகைமதிப்பில் உள்ளடக்கப்படும் களங்கள்

இலங்கையில் நடைபெறும் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளின் கீழ் பின்வரும் பிரிவுகள் உள்ளடக்கப்படுகிறது

## 1. விவசாயம்



# 2. கைத்தொழில்

- சுரங்கமறுத்தலும் அகழுதலும்





- உற்பத்தி







- மின்சாரம், எரிவாயு, நீராவி, வளிச் சீராக்கி





- நீர் வழங்கல், கழிவகற்றல், கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள் சுழற்சி






- நிர்மாணம்







# 3. வர்த்தகம் மற்றும் சேவைகள்



# 3. வர்த்தகம் மற்றும் சேவைகள் ....

- மொத்த சில்லறை வியாபாரம்
- போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல்
- தங்குமிடம் உணவு வழங்குதல்
- தகவற் தொழில்நுட்ப வெளியீடு
- நிதி, காப்புறுதி நடவடிக்கைகள்
- சொத்து விற்பனை நடவடிக்கைகள்
- தொழில்சார், விஞ்ஞான, தொழில்நுட்ப நடவடிக்கைகள்
- நிர்வாக, உதவிச் சேவை நடவடிக்கைகள்
- அரச, நிர்வாகப் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சமூகப் பாதுகாப்பு
- கல்வி
- பொதுமக்கள் சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்
- கலை மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்
- ஏனைய சேவை நடவடிக்கைகள்

# பொருளாதாரத் தொகைமதிப்பின் பிரதான கட்டங்கள்

4 பிரதான கட்டங்களாகும்.

1. இலங்கையின் சகல தோட்டங்களையும் (20 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்டது) நிரற்படுத்தல்

**2013 யூலை -ஆகஸ்ட் மாதங்கள்**

2. கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளில் ஈடுபடும் சகல கூறுகளையும்நிரற்படுத்தல்

**2013 செடெம்பர் -ஒக்டோபர்**

3. நிரற்படுத்தப்பட்ட விவசாயத்துக்குரிய சகல கூறுகளினதும் தகவல்கள் சேகரித்தல்

**2014 ஜனவரி –மார்ச்**

4. நிரற்படுத்தப்பட்ட விவசாயத்துக்குரிய சகல கூறுகளினதும் தகவல்கள் சேகரித்தல்

**2014 யூலை -ஆகஸ்ட்**

# பொருளாதாரத் தொகைமதிப்பின் மூலம் கணிக்கப்படும் சுட்டெண்கள்

## A . கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளின் பொருட்டு

**கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகட் பிரிவின் படியும் நிர்வாகப் பிரிவின் படியும்**

- வேலைவாய்ப்பு
- பெண்கள் தொழில் முயற்சியாண்மை
- உள்ளீடு, சொத்து, மூலதனப் பெறுமதி (சிறிய, நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்களை இனங்காணுதலிற்கு
- மொத்தப் பெறுமதி

**பொருளாதாரச் செயற்பாட்டின் படியும் (சுரங்கமறுத்தலும் அகழுதலும்... போன்றன) நிர்வாகப் பரிவின் படியும்**

- நிறுவனங்களின் எண்ணிக்கை
- சேவையில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை
- வெளியீடு, சம்பளமும் கூலியும்

# B. விவசாயப் பிரிவின் பொருட்டு

## நிர்வாகப் பிரிவின் படி

- பண்ணைக் கண்டங்களின் எண்ணிக்கையும் நிலப்பரப்பளவும்
- தோட்டங்களின் எண்ணிக்கையும் நிலப்பரப்பளவும
- நிலப் பாவனையும் உரிமையும்
- பயிரிடப்படும் நிலப்பரப்பளவு
- கால்நடை வளர்ப்புத் தகவல்கள்
- கங்கை நீர்/ ஆற்று நீர்/ நன்னீர் மீன் வளர்ப்பு
- தேனீர் வளர்ப்பு
- அலங்காரப் பூக்கள் வளர்ப்பு
- விவசாய இயந்திரப் பாவனை சம்பந்தமான தகவல்கள்

# தொகைமதிப்பை வெற்றிகரமான நடாத்த வேண்டுமாயின்....

பதிலளிப்போரிடமிருந்து சரியான தகவல்களைப் பெறுதல் வேண்டும்

அவர்கள் தாமாக முன்வரும் வகையில் ஊடகத்தினூடாக அவர்களுக்கு பேதிய அறிவை வழங்குதல் வேண்டும்

தொகைமதிப்பு சில கட்டங்களில் நடைபெறுவதால் உரிய சகல காலப்பகுதிகளையும் அவர்களுக்கு அறியத்தரல் வேண்டும்

# யாருக்கு அறியத்தரல் வேண்டும் ?

**சகல பொதுமக்களிற்கும்**

**விஷேடமாக**

கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகட் பிரிவிற்கு

ஏதேனும் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்கள்/ நிறுவனங்கள் ...

விவசாயப் பிரிவிற்கு

விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள்/ நிறுவனங்கள் ...

- தகவல்களை வழங்குவதற்கு தொகைமதிப்பு தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கும் பொதுஊடகங்களினால் பாரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடிவதுடன் தேசிய ஒன்றிணைப்பான இத்தொகைமதிப்பானது வெற்றி பெறுவதற்கும் வழிவகுக்கும்

- தொகைமதிப்பு தொடர்பாக தாங்கள் தெரிவிக்க எதிர்பார்க்கப்படும் தகவல்களில் ஏதேனும் தெளிவின்மை காணப்படின் அது தொடர்பாக முறையிடுமுன் தொகைமதிப்பு அதிகாரியான, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினை தொடர்பு கொண்டு அத்தகவல்களை திருத்தமானதாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

# பொருளாதாரத் தொகைமதிப்பில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் அறிவித்தல் முறைகள்

- அறிவித்தல் விளம்பரமும் செய்தியும் → தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள
- கடிதமும் அறிக்கையும் → செய்தித்தாள
- குறுஞ் செய்திகள் (SMS)
- ஊடக சந்திப்புகள் → தொலைக்காட்சி, வானொலி
- ஊடக தெளிவுபடுத்தல்கள் → தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்
- **News Bar**

பொருளாதாரத் தொகைமதிப்பு 2013/2014

# அறிவித்தல் வேலைத்திட்டம்

| இலக்கம் | செய்தி ஊடகம் | தொகைமதிப்புக் கட்டம் | அறிவித்தல் கால எல்லை | வார எண்ணிக்கை/ காலம் | ஊடகம் | அறிவித்தல் மேற்கொள்ளும் சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஊடக தெளிவுபடுத்தல் | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிறப்படுத்தல் | 2013.09.25 தொடக்கம் 2013.11.31 வரை | ஒரு முறை | தொலைக்காட்சி/ வானொலி/ செய்தித்தாள் | காலப் பிரிவுகளின் தொடக்கத்தில் |
| | | விவசாயத் தரவுகள் திரட்டுதல் | 2013.11.15 தொடக்கம் 2014.03.31 வரை | இரு முறை | தொலைக்காட்சி/ வானொலி/ செய்தித்தாள் | காலப் பிரிவுகளின் தொடக்கத்தில் |
| | | | | | | தரவு நிறப்படுத்தல் கட்டத்தின் போது |
| | | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள்தரவுகள் திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | இரு முறை | தொலைக்காட்சி/ வானொலி/ செய்தித்தாள் | காலப்பிரிவுகளின் தொடக்கத்தில் |
| | | | | | | தரவு நிறப்படுத்தல் கட்டத்தின் போது |
| 2 | விளம்பரப்படுத்தல் (இலத்திரனியல் ஊடகம்) | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிறப்படுத்தல் | 2013.09.25 தொடக்கம் 2013.11.31 வரை | வினாடி15, வினாடி 30 | தொலைக்காட்சி/ வானொலி/ செய்தித்தாள் | செய்தி அறிக்கையின் முன்பு மற்றும் பின்பு |
| | | விவசாயத் தரவுகள் திரட்டுதல் | 2013.11.15 தொடக்கம் 2014.03.31 வரை | | | பி.ப 6.30 ற்கும் பி.ப 10 தொலைக்காட்சி நாடகங்களிற்கு இடையில் |
| | | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தரவுகள் திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | | | |
| 3 | அறிவித்தல் (செய்தித்தாள்) | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிறப்படுத்தல் | 2013.09.25 தொடக்கம் 2013.11.31 வரை | முழுப்பக்கத்திலும் பாதிப் பக்கத்திலும் | செய்தித்தாள் | வாரத்திற்கு ஒருமுறை வார செய்திப் பத்திரிகைகளில் |
| | | விவசாயத் தரவுகள் திரட்டுதல | 2013.11.15 தொடக்கம் 2014.03.31 வரை | | | |
| | | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தரவுகளை திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | | | வார இறுதி நாள் பத்திரிகைகளில் |

# பொருளாதாரத் தொகைமதிப்பு 2013/2014

## அறிவித்தல் வேலைத்திட்டம் (தொடர்ச்சி)

| இலக்கம் | செய்தி ஊடகம் | தொகைமதிப்புக் கட்டம் | அறிவித்தல் கால எல்லை | வார எண்ணிக்கை/ காலம் | ஊடகம் | அறிவித்தல் மேற்கொள்ளும் சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|---|---|
| 4 | விளம்பரம் News bar | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிரற்படுத்தல் | 2013.09.25 தொடக்கம் 2013.11.31 வரை | | தொலைக்காட்சி | தொகைமதிப்புக் கட்டங்களில் |
| | | விவசாயத் தரவுகளை திரட்டுதல் | 2013.11.15 தொடக்கம் 2014.03.31 வரை | | | |
| | | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தரவுகளை திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | | | |
| 5 | கலந்துரையாடல் Talk Shows/ | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தரவுகளை திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | தேவையின் பொருட்டு | தொலைக்காட்சி / வானொலி | உரிய கலந்துரையாடல்களில் |
| 6 | குறுந்தகவல் (News alert/SMS) | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிரற்படுத்தல் | 2013.09.25 தொடக்கம் 2013.11.31 வரை | தேவையின் பொருட்டு | கையடக்கத் தொலைபேசி மற்றும் CDMA தொலைபேசி | |
| | | விவசாயத் தரவுகளை திரட்டுதல் | 2013.11.15 தொடக்கம் 2014.03.31 வரை | | | |
| | | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தரவுகளை திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | | | |
| 7 | அறிவித்தல் வேலைத்திட்டம் | தொகைமதிப்புக் கட்டங்களில் | 2013.09.30 | 15 வினாடிகளில் | தொலைக்கட்சி | ஒவ்வொரு தொகைமதிப்புக் கட்ட ஆரம்பத்திலும் |
| 8 | தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயற்பாட்டுக் குழவினால் எழுதப்படும் செய்தி அறிக்கை | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகளை நிரற்படுத்தல் | 2013.09.25 தொடக்கம் 2013.11.31 வரை | 3 தடவை | செய்தித்தாள் | பொருளாதாரத் தொகைமதிப்பு ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை |
| | | விவசாயத் தரவுகளை திரட்டுதல் | 2013.11.15 தொடக்கம் 2014.03.31 வரை | 3 தடவை | | |
| | | கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் தரவுகளை திரட்டுதல் | 2014.07.15 தொடக்கம் 2014.08.31 வரை | 3 தடவை | | |

# நன்றி